# இந்து அறிவியற் சிந்தனைகள்: தாயுமானவர் திருப்பாடல்களை மையப்படுத்திய ஆய்வு

**Selvakumari , S***

**ஆய்வுச் சுருக்கம்**

வேதாரணியம் என அழைக்கப்படும் திருமறைக்காட்டில் சைவவேளாளர் மரபில் கேடிலியப்பப்பிள்ளை, கெஜவல்லி அம்மையார் ஆகியோருக்கு மகவாக அவதரித்த தாயுமானவ சுவாமிகள் என்பவரினால் பாடப்பட்ட பாடல்களின் தொகுதிக்கு தாயுமானவ சுவாமிகள் திருப்பாடல்கள் என்று பெயர். திருவருள்பரசிவ வணக்கம் தொடக்கம் அகவல், வண்ணம் வரையிலான ஐம்பத்தாறு தலைப்புகளில் இப்பாடல்கள் அமைந்துள்ளன. மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை 1452 ஆகும். உயர் அனுபூதி நிலையில் நின்று தன்னுடைய சமய அனுபவத்தை வெளிப்படுத்திய தாயுமானவர், இந்து அறிவியற் பற்றிய சிந்தனைகளையும் தம் பாடல்களில் பதிவு செய்துள்ளார். இப்பின்னணியில் தாயுமானவர் திருப்பாடல்களூடாகப் புலனாகும் இந்து அறிவியற் சிந்தனைகளை ஆராய்வதனை மையப்படுத்தி இவ்வாய்வு நகர்கிறது. தாயுமானவர் திருப்பாடல்களை முதலாம் நிலைத்தரவுகளாகவும், ஏனைய நூல்கள் கட்டுரைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றினை இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் கொண்டு, சமூகவியல், ஒப்பீட்டு, விபரண ஆய்வு முறைமைகளைப் பயன்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. குண்டலினி சக்தி, மூலாக்கினி, அட்டாங்க யோகம் பற்றிய சிந்தனைகளூடாக உடல்- உளத்தூய்மை பற்றியும், அண்டம்பற்றிய கருத்தினை முன்வைக்கும் போது பஞ்ச பூதங்கள் பற்றியும், பரம்பொருளினது திருக்கூத்துத் தத்துவத்தினை முன்வைப்பதனூடாக உலக இயக்கம் பற்றியும், மற்றும் காலம், திசை வழிபாடு, நவக்கிரகங்கள், வானியல், சோதிடம், பூதத்தூய்மை, உடல் தூய்மை, மந்திரத் தூய்மை, ஆன்மத் தூய்மை, பொருள் தூய்மை எனும் பஞ்ச சுத்திகள் என இந்து அறிவியல் பற்றிய சிந்தனைகளுக்கு இப்பாடல்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளதனை அவதானிக்க முடிகிறது.

**பிரதான சொற்கள்:** ஆறிவியல், அண்டம். சுத்தி, மூலாக்கினி

To whom correspondence should be addressed: Selvakumari.selva@gmail.com

*Lecturer, Department of Languages, South Eastern University of Sri Lanka.